முருகப்பெருமான் துணை

**மகான் பெரியாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**12.09.2023**, செவ்வாய்கிழமை

1. மாதருமனே கருணையே வடிவான
மகானே ஆறுமுக அரங்கனே
பூதலம் காத்திட வேண்டி
புண்ணிய வழி கண்ட தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது யாளிதிங்கள்
அய்யைந்தோர் திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 26 ம் நாள், 12.09.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் பெரியாழ்வார் யானும்
வழங்குவேன் உலக நலம் பெற
சோரமின்றி மக்கள் திடமுற
சுத்த சைவ நெறி காட்டும்
4. காட்டும் அரங்கன் நெறியே
கலியின் துன்பம் போக்கி
வாட்டமிலா பாதுகாப்புத் தரும்
வருந் தலைமுறைகள் எல்லாம்
5. எல்லோரும் தயவுபட வாழ
எவ்வுயிரையும் வதை செய்யா
வள்ளல் தன்மைபட அனுக
வழிவகை செய்து வளர்க்கும்
6. வளர்ச்சி அடைந்த சமூகமாக
வள்ளல் தன்மை குன்றா
தளர்வின்றி தருமம் வளர்த்து
தவராஜனே சிறந்த குருவென

7. குருவென சரணாகதி கொண்டு
குருபரன் ஆறுமுகப்பெருமான்
பெருமைமிக்க வழிபாடே
பேருலகை காக்கும் எனும் அறிவு

8. அறிவுத் தெளிவு கூடி
அகிலமே மாற்றம் காணும்
பரிவும் நற்பண்பும் நிறைந்த
பகருவேன் மேன் மக்களாகி

9. ஆகியே களமிறங்கி சேவை
ஆற்றும் ஞானவான்களாக
அகிலம் எங்கிலும் நிரம்பிட
அற்புதம் தனை உலகம் அடைந்து

10. அடைந்து மாற்றம் தானும்
அரங்கமகானால் நடந்தேறும்
தடையற எங்கும் தருமவடிவில்
தவராஜன் சக்தியாக நிரம்பிட

11. நிரம்பிட உலக மாற்றமதும்
நீதி நேர்மை குன்றிடா
அறம்நிறைந்த உலகாக மாறும்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—